| | |
|---|---|
| Headline | TNB to ensure no power disruption for GE14 | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 19 Apr 2018 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 13 |
| ArticleSize | 91 cm² | Journalist | NULL |
| PR Value | RM 794 | | |
| | | | |



# தேர்தல் காலங்களில் மின் விநியோகம் சீராக இருக்கும்

## - டிஎன்பி உறுதி

கோலாலம்பூர், ஏப். 19-

14ஆவது பொது தேர்தல் காலங்களில் வேட்பாளர் நியமனம், வாக்களிப்பு மற்றும் வாக்குகளை எண்ணும் மையங்களில் எல்லாம் மின் விநியோகம் சீராக இருப்பதை உறுதிப்படுத்த டிஎன்பி என்ற தெனாகா நேசனல் பெர்ஹாட் அனைத்து ஏற்பாடு களையும் செய்துள்ளது. கடந்தாண்டு நவம்பர் மாதம் தொடக்கத்திலிருந்தே எல்லா பகுதிகளிலும் தங்கு தடையின்றி மின் விநியோகம் இருப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளை டிஎன்பி உறுதிப்படுத்தி வருவதாக இதன் வர்த்தகப் பிரிவு தலைமை அதிகாரி டத்தோ ரோஸ்லான் ரஹ்மான் தெரிவித்தார்.

தொழில்நுட்ப மற்றும் செயல்முறை அம்சங்கள் அனைத்தும் கட்டொழுங்காக அமல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் மற்றும் தலைமை அலுவலகத்திலும் நடவடிக்கை அறை அமைக்கப்பட் டுள்ளது. 14ஆவது பொதுத் தேர்தல் நடைபெறும் சமயத்தில் எந்தவொரு பிரச்சினையை யும் சமாளிக்க ஆங்காங்கே டிஎன்பி தொழில்நுட்ப உத வியாளர்கள் தயார் நிலையில் பணியில் அமர்த்தப்படு வார்கள் என்று டிஎன்பி ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

Powered by: iSENTIA